பக்கங்கள் 22

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை 14.09.2025 | அதிர்வு 44

## பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் தீர்மானத்துக்கு இலங்கை அரசு முழு ஆதரவு



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பாலஸ்தீனப் பிரச்சினை குறித்த தீர்மானத்தை 02▶



# மஹிந்தவுக்கு உயிராபத்து!

## அவர் பாதுகாக்கப்பட வேண்டும் என அரசிடம் ரணிலின் கட்சி வலியுறுத்து



"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை நிறைவு செய்வதற்கு இறுதியாக தலைமை வகித்த அரச தலைவர் என்ற ரீதியில் உலகின் சில நாடுகளுக்குச் சென்று அவரால் தனித்து நாடு திரும்ப முடியாது. ஒரு சில குழுக்களால் கைகளிலுள்ள ஆயுதங்களைக் கொண்டு கொல்லப்படக் கூடிய அச்சுறுத்தலுடைய தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆவார். 02▶

# மாகாண சபைத் தேர்தலை நடத்த அநுர அரசு ஏன் அஞ்சுகின்றது?

## அதை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக அழுத்தம் பிரயோகிப்போம் என்கின்றது சஜித் தரப்பு

"மாகாண சபைத் தேர்தலைக் கண்டு அரசு எதற்காக அஞ்சுகின்றது? இந்தத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசுக்குள்ள உண்மையான மக்கள் ஆணை என்ன என்பது வெளிப்படும். அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக அரசுக்கு நாம் அழுத்தம் பிரயோகிப்போம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் 02▶





இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு நீண்ட காலத்தின் பின்னர் அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பில் இன்று காலை 10 மணிக்குக் கூடுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள், ஒழுக்காற்று நடவடிக்கை உட்பட தேர்தலை ஒட்டி எடுக்கப்பட்ட பிற செயற்பாடுகள், உத்தேச மாகாண சபைத் தேர்தல், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தை ஒட்டி தமிழரசுக் கட்சி எடுத்த நடவடிக்கைகள் ஆகியவை பற்றியெல்லாம் இன்றைய கூட்டத்தில் விரிவாக அலசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள கட்சியின் வழக்குகள் தொடர்பாக, 03▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மாகாண சபை...**

திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இந்த அரசு ஊடகப் பிரசாரங்கள் மூலம் முன்னோக்கிச் செல்ல முயற்சிக்கின்றது. தேசிய மக்கள் கட்சி ஆட்சியேற்று ஓராண்டு நிறைவடைகின்றது.

தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் அரசு எதனை நடைமுறைப்படுத்தியுள்ளது? வாக்குறுதிகளை ஒருபுறம் வைத்து விட்டு ஊடகப் பிரசாரங்களை முன்னெடுப்பதிலேயே அரசு அவதானம் செலுத்தி வருகின்றது. அவற்றைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை அரசியல் பழிவாங்கல்களுக்கும் உட்படுத்துகின்றது.

அரசு மாத்திரமின்றி நாடாளுமன்றத்திலும் சபாநாயகரது நடத்தைகளிலும் பிரச்சினையுள்ளது. நாடாளுமன்றத்தில் சபாநாயகர் என்பவர் சகல கட்சிகளுக்கும் பொதுவானவர்.

அவரால் அனைத்து கட்சி உறுப்பினர்களும் சமமாகவே நடத்தப்பட வேண்டும். ஆனால், தற்போதைய சபாநாயகரின் நடத்தையை அவதானிக்கும் போது நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுகின்றதா என்பதே சந்தேகத்துக்கிடமாகவுள்ளது. இது தொடர்பில் எதிர்க்கட்சி எம்.பி.க்களும் தொடர்ச்சியாக தமது எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் வெளிநாட்டவர்களுக்கு நாட்டின் நிலப்பரப்பில் ஒரு அங்குலம் கூட வழங்கப்படாது எனக் கூறியவர்கள் இன்று முதலீடு என்ற போர்வையில் பல இடங்களை தாரைவார்த்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் அபிவிருத்திக்கு முதலீடுகள் அவசியமாகும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

அதேவேளை, பொது இடங்களை அந்நியர்களுக்கு வழங்கும் போது அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலின் போது மின் கட்டணம் தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க மிக அழகான கதைகளை மக்களிடம் கூறினார். மின் கட்டணங்களை மூன்றில் இடங்கு மடங்கால் குறைக்க முடியும் எனக் கூறினார்.

தனது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே அதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனக் கூறினார். ஆனால், இன்று ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர அவர் கூறியபடி குறைக்கப்படவில்லை.

அத்தோடு அண்மையில் மூன்றாவது முறையாக மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஊழல், மோசடிகளை ஒழித்து மக்களுக்கு நிவாரணம் வழங்கியதாகக் கூறிய அரசு அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்காக அரசு மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியைப் போன்று இதற்கு முன்னர் எந்தவொரு அரசும் மக்களை ஏமாற்றவில்லை. அதே போன்றுதான் மாகாண சபைத் தேர்தல் விடயத்திலும் அரசு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. மேலும் தாமதப்படுத்தாது வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

கடந்த அரசுகளைப் போன்று இந்த அரசும் மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்த முயற்சித்தால் அது தவறாகும்.

மாகாண சபை என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டியவையாகும். எனவே, ஆளுநர்களால் அவற்றைத் தொடர்ந்தும் ஆட்சி செய்ய அனுமதிக்க முடியாது.

அவசர நிலைமைகளில் அவ்வாறு செய்ய முடியும். ஆனால், வருடக்கணக்கில் ஆளுநர் ஆட்சிக்கு இடமளிப்பது தவறாகும். எனவே, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றோம்.

மாகாண சபைத் தேர்தலைக் கண்டு அரசு எதற்காக அஞ்சுகின்றது? இந்தத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசுக்குள்ள உண்மையான மக்கள் ஆணை வெளிப்படும்.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக அரசுக்கு நாம் அழுத்தம் பிரயோகிப்போம்." – என்றார்.

---

**பாலஸ்தீனத்தை...**

இலங்கை வரவேற்கின்றது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனப் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்த்து வைப்பது மற்றும் இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளை தனித்தனி நாடுகளாக அங்கீகரிப்பது குறித்த 'நியூயோர்க் பிரகடனத்தை' ஆதரிக்கும் தீர்மானத்துக்கு ஐ.நா. பொதுச் சபையில் இலங்கை உட்பட 142 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

இது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

"பாலஸ்தீனப் பிரச்சினைக்கு, அமைதிக்கான தீர்வு மற்றும் இரு நாடுகள் தீர்வைச் செயற்படுத்துதல் குறித்த நியூயோர்க் பிரகடனத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக்கொண்டதை இலங்கை வரவேற்கின்றது.

இந்த முக்கியமான முயற்சியில் தலைமை தாங்கியதற்காக சவூதி அரேபியா மற்றும் பிரான்ஸ்/க்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க, பாலஸ்தீன மக்களின் அரச அந்தஸ்துக்கான மறுக்க முடியாத உரிமைக்கு, இலங்கை தனது அசைக்க முடியாத ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது." – என்றார்.

**மஹிந்தவுக்கு...**

எனவே, இலங்கை அரசால் மஹிந்த ராஜபக்ஷ பாதுகாக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று சனிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களைச் சந்தித்த பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவால் கொண்டு வரப்பட்ட 1978ஆம் ஆண்டு அரசமைப்பு அமெரிக்க மற்றும் பிரான்ஸ் அரசமைப்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதற்கமைய அமெரிக்காவில் ஜனாதிபதி ஒருவர் பதவிக் காலத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி என அழைக்கப்படுவதில்லை. மாறாக அவர் உயிர் வாழும் வரை பதவி வகித்தல் மற்றும் அதன் பின்னரான நிலைமை ஆகிய இரண்டு மாத்திரமே காணப்படுகின்றது.

எமது நாட்டின் அரசமைப்புக்கமைய ஜனாதிபதியின் பதவிக் காலத்துக்குப் பிறகு அவர்களின் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் நாட்டுக்காக முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளனர். உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை நிறைவு செய்வதற்கு இறுதியாக தலைமை வகித்த அரச தலைவர் என்ற ரீதியில் உலகின் சில நாடுகளுக்குச் சென்று அவரால் தனித்து நாடு திரும்ப முடியாது.

ஒரு சில குழுக்களால் கைகளிலுள்ள ஆயுதங்களைக் கொண்டு கொல்லப்படக் கூடிய அச்சுறுத்தலுடைய தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆவார். எனவே, இலங்கை அரசால் மஹிந்த ராஜபக்ஷ பாதுகாக்கப்பட வேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை அரசியல் வரலாற்றில் சகல ஆளும், எதிர்க்கட்சி தலைவர்களும் அகால மரணமடைந்தவர்களாக அல்லது கொலை முயற்சியில் இருந்து தப்பியவர்களாகவே உள்ளனர்.

எனவே, இந்தச் செயல்கள் மூலம் சமூகத்தில் வெறுப்பையும் விரோதத்தையும் உருவாக்குவது இலங்கைக்கு நன்மை அளிக்காது. ஜனநாயக நாடுகள் என்றும் முன்னோக்கியே பயணித்திருக்கின்றன. நேபாளம் போன்ற நாடுகள் இந்த வரலாறுகளைக் கற்றால் தற்போதைய நிலைமைக்கு உகந்ததாக இருக்கும்.

இலங்கையில் அரசியல் கலவரம் வெடித்த போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்தார். அவரது வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட போதிலும், அவர் பயந்து ஓடவில்லை. மாறாக ஏனையோரது வீடுகள் எரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். ஆனால், நேபாள பிரதமர் அந்த சந்தர்ப்பத்தில் தப்பிச் சென்றதாலேயே ஏனையோர் பாதிக்கப்பட்டனர் என்பதே எனது நிலைப்பாடாகும். எனவே, தேசியத் தலைவர் என்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு அந்தக் கௌரவம் வழங்கப்பட வேண்டும்." – என்றார்.






# போலியாக பதிவு செய்யப்பட்ட 2 ஜீப்களுடன் இருவர் கைது

சட்டவிரோதமாக 2 ஜீப்களை இறக்குமதி செய்து போலியாக பதிவு செய்தமை தொடர்பில் வத்தேகம நகர சபையின் முன்னாள் மேயர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விரிவான விசாரணைகளின் பின்னர் அவர்கள் கைதாகியுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவுகளை மாற்றியமைத்து பதிவுகளை மேற்கொண்டுள்ளதுடன் இதற்கு திணைக்களத்தின் ஊழியரொருவரின் உதவியையும் பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட வத்தேகம நகர சபையின் முன்னாள் மேயரான ரவீந்திர பண்டார 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடாக தெரிவாகியிருந்தார்.

கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேகநபர் சமீபத்தில் காலமான முன்னாள் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தவுடன் நெருங்கி செயற்பட்டதாகக் கூறப்படும் லக் ஷித மனோஜ் வீரபாகு என்பவராவார்.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட 2 ஜீப்களும் மேலதிக விசாரணைகளுக்காக மெனிக்ஹின்ன பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இரகசியம் பரகசியம்...

மத்திய குழுவில் எடுத்த கட்சியின் நிலைப்பாட்டிற்கு மாறாக சில தரப்புகள் நீதிமன்றத்தில் எடுத்த நிலைப்பாடுகள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படக்கூடிய நிலைமை உள்ளது.

கட்சியின் நாடாளுமன்றக் குழு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் கட்சித் தலைமைக்கு தெரியாமல் – அல்லது கலந்தாலோசிக்காமல் – பிறிதொரு அணி போல இயங்குவது பற்றிய விடயம் இன்று கட்சி உறுப்பினர்களால் மத்திய குழுவில் கிளப்பப்படுவதற்கும் வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது.

குறிப்பாக சட்டமூலங்கள், முக்கிய விவகாரங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கட்சி எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து குறைந்த பட்சம் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் கூட முடிவெடுக்கப்படாமல், நாடாளுமன்றக் குழு, கட்சிக்கு பிறிதான ஓர் அமைப்புப் போல செயல்படுவது பற்றி மத்திய குழு உறுப்பினர்கள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ள சூழ்நிலையில், அதுவும் இன்றைய கூட்டத்தில் காத்திரமாக எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுக்கோப்புக் குலைந்திருந்த தமிழரசுக் கட்சி, இப்போது ஓரளவு ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் வரும் சூழ்நிலையில், அதை மேலும் ஒழுங்குபடுத்துவது குறித்து இன்றைய கூட்டத்தில் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கலாம்.

கட்சியின் குழம்பியுள்ள தொகுதிக் கிளைகளை சீரமஜ்த்து ஒழுங்குபடுத்துவது பற்றிய ஏற்பாடுகள் குறித்தும் இன்று ஆராயப்படும் எனத் தெரிகிறது.

பெரிய ஆரவாரங்கள் இல்லாமல் இந்த முறை கூட்டம் கூடுகின்ற போதிலும், கட்சிக்குள் நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கும் பல விடயங்கள் எந்தக் கணத்திலும் சுவாலை விட்டு இன்று எரியக்கூடிய வாய்ப்பு இருப்பதையும் ஒதுக்க விட முடியாது.

அம்பாறை மாவட்டத்தில் கூட்டம் நடைபெறுவதால் மத்திய குழுவின் வடக்கு பகுதி உறுப்பினர்கள் அக்கூட்டத்தில் எவ்வளவு எண்ணிக்கையில் பங்குபற்றுவார்கள் என்பது கேள்விக்குறிதான்.

* * *

அண்மையில் இந்தோனேசியாவில் வைத்து மடக்கப்பட்ட இலங்கையின் போதைப் பொருள் சாம்ராஜ்ய தலைவரான கெஹல்பத்ர பத்மே குழுவினர்தான் இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகத்தில் அரைவாசிப் பகுதியின் பின்னணியினர் எனப் புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர். குழுவின் தலைவர் மடக்கப்பட்டு இருப்பதால் போதைப் பொருள் வர்த்தகம் இனிமேல் நாட்டில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படக்கூடிய ஏதுநிலைகள் உறுதியாக உள்ளன என்று அவர்கள் கூறுகின்றனர்.

போதைப் பொருள் வர்த்தகத்துக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கையில் மேற்படி பாதாள உலகக் கும்பலின் தலைவர் மடக்கப்பட்டமை மிக முக்கிய நிகழ்வு என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

வெளிநாட்டுக்குச் சென்று அவரை மடக்கி வருகின்ற ஓபரேஷன் ஆரம்பத்திலிருந்தே நேரடியாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டதாக தென்னிலங்கைப் புலனாய்வுச் செய்தியாளர் ஒருவர் தகவல் வெளியிட்டு இருக்கிறார்.

ஒஸாமா பின்லேடனைக் கருவறுக்கும் நடவடிக்கையை வெள்ளைமாளிகையில் இருந்தபடி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேரடியாகச் சம்பந்தப்பட்டு, நேரில் விடயங்களை கமராக்கள் மூலம் பார்வையிட்டு, வழி நடத்தியமையைப் போல, இந்தோனேசியாவில் கெஹல்பத்ர பத்மே குழுவினர் மடக்கப்படும் நடவடிக்கையை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா, ஜனாதிபதி செயலகத்தில் விசேடமாக ஒதுக்கப்பட்ட ஓர் அறையில் இருந்தபடி நேரடியாகப் பார்வையிட்டு வழிநடத்தல் மேற்கொண்டார் என்று அந்தச் செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

'வெற்றி கிட்டினால் தலைமைக்கு புகழாரம், சறுக்கினால் பொறுப்பு அதிகாரிகள் மீது' என்பது இலங்கையில் வழமையான பல்லவிதான். புலிகள் பக்கத்தில் இது வேறு விதமான சொல்லாடலில் பயன்படுத்தப்படுவதுண்டு.

# தனித்து நாடாளுமன்றக் குழுவாக அல்லாமல் தமிழரசுக் கட்சியாக முடிவு எடுக்க வேண்டும்!

## எம்.பிக்களின் தீர்மானங்கள் தொடர்பில் சாணக்கியன் கருத்து

(வாலகிருஸ்ணா)

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளைக் குறைக்கும் சட்டமூலத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ இலங்கைத் தமிழரசுக் கட்சி வாக்களிக்கத் தேவையில்லை என்ற முடிவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரே தெரிவித்தார் என்று கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இது போன்ற விடயங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் ஊடாக தீர்மானத்தை எடுக்காமல் கட்சியின் ஊடாக தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியை சந்திக்கக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. அந்த சந்திப்பின்போது நடந்த சில விடயங்களை ஒரு சில ஊடக நண்பர்கள் தொலைபேசி அழைப்பின் மூலம் கேட்டு அறிந்து செய்திகளை வெளியிட்டு இருந்தார்கள். உண்மையில் இது தொடர்பாக வெளியிடுவதற்கு எந்த ஒரு நிலைப்பாட்டிலும் நான் இருக்கவில்லை. ஏன் என்றால் அது ஒரு உத்தியோகபூர்வமான சந்திப்பு இல்லை. ஜனாதிபதியை எனக்கு கடந்த நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்தவர் என்ற அடிப்படையில் நன்கு தெரிந்தவர். அதன் அடிப்படையில் ஒரு சில விடயங்களைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக கிடைத்ததே தவிர உத்தியோகபூர்வமான சந்திப்பு என்று அதை நான் சொல்லவில்லை. அதனால் அது தொடர்பான உத்தியோகபூர்வமான அறிக்கையும் நான் வெளியிடவில்லை.

இச்சந்திப்பில் முக்கியமாக மூன்று பிரதான விடயங்களை பற்றி பேசி இருந்தேன்.

முதலாவது - மாகாண சபைத் தேர்தல்.

மாகாண சபை தேர்தலுக்கு வழி செய்யும் தனிநபர் சட்டமூலம் ஒன்றை நான் சமர்ப்பித்து இருக்கின்றேன். தற்போது அது இரண்டாம் வாசிப்புக்குத் தயாராகி இருக்கின்றது. அரசாங்கம் தன்னுடைய சிபாரிசை அனுப்புவதன் மூலம் மாத்திரம்தான் அந்தச் சட்டமூலத்தை ஒரு சட்டமாக இயக்குவதற்கு இரண்டாம் வாசிப்புக்கு போவதற்கான வாய்ப்புக் கிட்டும். அந்த வகையில் நான் ஜனாதிபதியிடம் அது பற்றிக் கேட்டிருந்தேன். ரில்வின் சில்வா யாழ் மாவட்டத்தில் வைத்து எல்லை நிர்ணயம் செய்ததன் பிற்பாடுதான் தேர்தலை நடத்தலாம் எனக் கூறியிருந்தார்.



அத்தோடு ஐ.நாவுக்கு இலங்கை அரசு அனுப்பிய அறிக்கையிலும் கூட தேர்தல் முறை தொடர்பான எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை எல்லை நிர்ணயம் செய்ததன் பிற்பாடு தான் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என்று சொன்னதாக இருந்தது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடம் நான் தெளிவான விளக்கங்களை வழங்க வேண்டும் எனக் கேட்டிருந்தேன்.

ஜனாதிபதி அந்த நேரத்தில் எனக்குக் கூறிய பதிலைப் பார்த்தபோது அவர் எந்த ஒரு முடிவும் எடுக்கவில்லை என்றே புரிந்தது. எல்லை நிர்ணயம் செய்துதான் தேர்தல் நடத்துவதா அல்லது விகிதாசார முறையில் தேர்தல் நடத்துவதா என்பதைப் பற்றி இன்னும் ஒரு முடிவே இல்லை என்பதைத் தான் அவர் கூறியிருந்தார்.

அதற்கு நான், எல்லை நிர்ணயம் செய்ததன் பிற்பாடுதான் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என ஐ.நாவிற்குக் கூறியிருக்கின்றீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர், நாங்கள் தேர்தல் நடத்த வேண்டும் என்று தான் ஐ.நாவுக்குச் சொல்ல வேண்டுமே தவிர, எல்லை நிர்ணயம் செய்தோ அல்லது விகிதாசார முறையிலோ அதைச் செய்ய வேண்டும் என நாங்கள் அவர்களுக்கு சொல்ல வேண்டிய தேவை இல்லையே என எனக்குப் பதில் கூறியிருந்தார்.

ஆனால் ஐ.நாவுக்கு இலங்கை அனுப்பிய அறிக்கையில் அவ்வாறுதான் (எல்லை நிர்ணயம் முடிந்த பின்னர்தான் தேர்தல் என்றே) கூறப்பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தில், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கட்சிகளுடன் பேசி ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருந்தது. இதையே அவர் எனக்குக் கூறியிருந்தார். இதை வைத்துப் பார்த்தால் எந்த முறையில் தேர்தல் நடத்துவது என்பது சம்பந்தமாக அரசாங்கத்திற்குள் சில குழப்பங்கள் இருக்கின்றமை போல் தெரிகின்றது.

இரண்டாவதுவிடயம்-ஒருஅபிவிருத்தி நிதியம் உருவாக்குதல் தொடர்பாக பல வருடங்களாக பேசிக் கொண்டு வருகின்றோம். இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியை கடந்த ஐந்தாம் மாதம் அளவில் அந்த அபிவிருத்தி நிதியத்திற்குப் பொறுப்பானவர்கள் சந்தித்திருந்தார்கள். அந்தச் சந்திப்பின் போதும் கூட அதற்கான ஆரம்ப கட்ட வேலைகளை எடுப்பதாக கூறப்பட்டது. ஆனால் அதற்கும் எந்த விதமான முன்னெடுப்புகளும் இல்லை. ஜனாதிபதி அதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்து இருக்கின்றார்.

மூன்றாவதாக - எமது மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனத்துக்கு எடுத்துச் சென்றிருந்தேன். மாவட்டத்துக்குள் இருக்கின்ற நிர்வாகப் பிரச்சனைகள், மாவட்டத்திற்குள் இருக்கின்ற தீர்க்கப்படாத பிரச்சினைகள், இவ்வாறான பல பிரச்சினைகளைப் பற்றியும் நான் ஜனாதிபதியுடன் உரையாடியிருந்தேன்.

இந்த விடயங்கள் தொடர்பாகத்தான் நான் ஜனாதிபதியைச் சந்தித்தேன். ஜனாதிபதி பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார். நான் நினைக்கின்றேன் நான் சொன்ன பல விடயங்களுக்கு விரைவாக சில நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்திலே எடுக்கப்படும். பல பிரச்சினைகள் தொடர்பாக சில தீர்மானங்கள் எடுப்பதற்கு நாங்களும் அந்த தீர்மானங்களை எடுப்பதற்கு பங்குதாரராக இருக்க கூடிய வாய்ப்புகள் ஏற்படலாம் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது.

மக்கள் நலன் சார்ந்ததாகத்தான், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான தேவை இல்லாத செலவுகளைக் குறைப்பது என்கின்ற சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. அதனை மக்கள் நலன் சார்ந்த விடயமாகப் பார்க்கின்றேன். ஏனென்றால் மக்களுடைய வரிப் பணத்தை அநியாயமாக இவ்வாறு முன்னாள் ஜனாதிபதிகளுக்கான செலவுகளுக்குப் பயன்படுத்துவது அநியாயமான விடயம். நாங்கள் அந்த சட்டமூலத்தை ஆதரித்து, அரசாங்கத்துடன் இணைந்து அரசாங்கம் கொண்டு வந்த அந்த சட்டமூலத்தை ஆதரித்து, அந்த ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை இல்லாமல் செய்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஆதரவு என்கின்ற செய்தியைச் சொல்லி இருக்க வேண்டும்

தொடர்ச்சி▼

# தனித்து நாடாளுமன்றக் குழுவாக அல்லாமல் தமிழரசுக் கட்சியாக முடிவு எடுக்க வேண்டும்!

## எம்.பிக்களின் தீர்மானங்கள் தொடர்பில் சாணக்கியன் கருத்து

தொடர்ச்சி▲

என்பது என்னுடைய நிலைப்பாடு.

அன்றைய தினம் நான் நாடாளுமன்றத்திற்கு மூன்று மணி அளவில் வந்திருந்தேன். நான் அந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்றே வந்திருந்தேன். நான் வந்த போது எமது கட்சியினுடைய கொரோடா அவர்கள், அதாவது நமது நாடாளுமன்றக் குழு அன்றைய தினம் காலையில் கூடி ஒரு முடிவு எடுத்ததாக – அதாவது இந்த சட்டத்துக்கு நாங்கள் ஆதரவாக வாக்களிக்க போவதில்லை, எதிராகவும் வாக்களிக்கப் போவதில்லை என்று நாடாளுமன்றக் குழு முடிவு எடுத்ததாக, நாடாளுமன்றக் குழுவின் கொரோடா தெரிவித்திருந்தார்.

அவ்வாறு அவர் கூறியபோது, நான் அதனை மீறி கட்சியினுடைய உறுப்பினர் என்கின்ற அடிப்படையில் அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ள முடியாது. இருந்தபோதிலும் நாடாளுமன்றக் குழு கூடியதாகத் தெரியவில்லை. நாடாளுமன்றக் குழு கூடுவதாக இருந்தால் எங்களுக்கு என்ற பிரத்தியேகமான “வட்ஸ் அப்” குழு இருக்கிறது. அந்த குழுவில் கொரோடா ஒரு செய்தியை அனுப்புவார். நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இருப்பதாகக் கூறுவர். இவ்வாறான நேரங்களில் நாங்கள் முக்கியமான விடயங்களைப் பற்றி பேசுவோம்.

ஆனால் அன்றைய தினம் இவ்வாறு ஒரு செய்தியும் வரவில்லை. இது தொடர்பாக தீர்மானம் எடுக்க போவதாகவும் எனக்கு தெரியாது. வாக்களிக்க வந்த எனக்கும் வாக்களிக்க கூடிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இந்த விடயம் தொடர்பாக எமது நாடாளுமன்றக் குழுத் தலைவர் அவர்கள் நிச்சயமாக ஊடகங்களுக்குப் பதில் கருத்து கூற வேண்டிய தேவை இருக்கின்றது.

ஏனென்றால் நாங்கள் கடந்த 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலும் உண்மையில் மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் வருகின்ற போது நாடாளுமன்ற வளாகத்துக்குள் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழமையாக அந்த நேரத்தில் ஆதரவாக வாக்களித்து இருக்கின்றோம்.

குறிப்பாக தமிழ் இனப் பிரச்சினைகள், அரசமைப்புத் தொடர்பான பிரச்சினைகள், இவ்வாறான விடயங்கள் வருகின்ற போது நாங்கள் ஒரு கூட்டாக முடிவு எடுத்துச் செயற்பட்டிருக்கின்றோம். அதாவது மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் என்பதனையும் தாண்டி எமது கொள்கைகள் அடிப்படையில் சில விடயங்கள் வருகின்ற போது நாங்கள் வாக்களிக்காமல் இருப்பது வழமை.

ஆனால் எனக்கு இவ்வாறு நாடாளுமன்றக் குழு பேசி, இதற்கு வாக்களிப்பில் கலந்து கொள்வதில்லை என்று சொன்னதன் பிற்பாடு அது பற்றித் தெரியும். நான் தனி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக அதனை ஆதரித்து வாக்களித்து இருந்தால் கட்சி தீர்மானத்தில் மேலும் ஒரு செயல்பாடாக இருந்திருக்கும். அந்த வகையில் உண்மையில் நான் இந்த இடத்தில் எங்களுக்கு வாக்களித்த மக்களிடம் இந்தப் பிழையான தீர்மானத்தை பற்றி நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கை தமிழரசு கட்சி நிச்சயமாக அந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்து இருக்க வேண்டும்.

இது அரசாங்கத்திற்கு சார்பான சட்டமூலம் அல்ல. மக்களுக்கு சார்பான சட்டமூலம் என்கின்ற வகையில் அதனை ஆதரிக்க வேண்டும்.

நான் எப்போதும் கட்சி தீர்மானங்களுக்கு கட்டுப்படுகின்ற ஒருவன். ஜனாதிபதி தேர்தலில் கட்சி என்ன தீர்மானம் எடுக்கின்றது என்று பார்த்தால் அதற்கும் நான் கட்டுப்படுவேன். அதே நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தலை கையாளுவது சம்பந்தமாக எங்களுடைய கட்சி முடிவெடுத்தால் அதற்கும் நான் கட்டுப்படுவேன். உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக ஒரு தீர்மானம் எடுத்தால் அதற்கும் நான் கட்டுப்படுவேன். அதேபோன்றுதான் இந்த வாக்கெடுப்புச் சம்பந்தமான விடயத்திலும் எங்களுக்கு கட்சியினுடைய கொரடா அவர்தான் எங்களுக்கு வாக்களிப்பது தொடர்பாக சொல்ல வேண்டும். அந்த தீர்மானத்திற்கு நான் கட்டுப்பட்டு இருக்கின்றேன்.

சிலநாடாளுமன்றஉறுப்பினர்கள்-ஓரிருவர் – இந்தச் சட்ட மூலம் தொடர்பில் அரசுக்கு ஆதரவாக, அதாவது மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்காக, நாங்கள் வாக்களிக்க வேண்டும் என்று பேசினர் எனவும் நான் அறிந்திருக்கின்றேன். அதாவது எங்களுடைய நாடாளுமன்றக் குழுவிலே ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசினர் என அறிகின்றேன். உண்மையாக அது கூட்டமாக நடைபெறாததனால் அந்த விடயங்கள் எனக்கு தெரியாது. அது அறிவிக்கப்படவும் இல்லை.

அதனால்தான் சொல்லுகின்றேன். ஊடகத்தில் இந்த கேள்வியை கேட்டதனால்தான் நான் இந்தப் பதிலைச் சொல்ல வேண்டிய நிலைப்பாட்டுக்கு தள்ளப்பட்டு இருக்கின்றேன். ஏனென்றால் இது உள் கட்சி விஷயம். இது உள்கட்சி விஷயமே, அதனை நான் பேசாமல் போகவும் முடியாது.

எதிர்காலத்தில் ஊழல் ஒழிப்பு சம்பந்தமாக இவ்வாறான வாக்கெடுப்புகள் வந்தால் இலங்கை தமிழர் கட்சியினுடைய தீர்மானம்தான் என்னுடைய தீர்மானமாக அமையும். இலங்கைத் தமிழரசு கட்சியாக தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை எதிர்காலத்தில் இருக்கின்றது போல் தெரிகின்றது. நாடாளுமன்றக் குழுவாக மாத்திரம் எடுக்கலாம் என நினைக்கின்றேன். ஆனால் கட்சி என்கின்ற ரீதியில் இதனை நாங்கள் பேசி தீர்மானம் எடுத்திருந்தால் இதற்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடிய சூழல் வந்திருக்கும்.

என்னுடைய நிலைப்பாடு மக்களுக்கு தேவை இல்லாத செலவுகளை குறைத்து, மக்கள் நலன் சார்ந்த விடயங்களை ஆதரிக்க வேண்டும் என்பதுதான். அது எமது கட்சியின் உடைய நிலைப்பாடுமே. ஆனால் கட்சி என்கின்ற அடிப்படையில் எதிர்காலங்களில் இவ்வாறான விடயங்களுக்கு நாங்கள் ஆதரவாக – நிச்சயமாக வாக்களிப்பதற்கு – நடவடிக்கை எடுக்க வேண்டும், அதனை நான் நிச்சயமாக எடுப்பேன்.

நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியிலும் தொடர்ந்து கைதுகள் நடைபெறுக் கொண்டிருந்தன. அந்தக் கைதுகளைப் பார்த்தீர்கள் என்றால் அவர்கள் கோடிக்கணக்கான மோசடிகள் செய்தவர்களின் குற்றங்களை விட்டு விட்டு, உடனடியாக கைது செய்யலாம் என்பதற்காக 5 லட்சம் 10 லட்சம் ரூபா குற்றங்களுக்கு கைது செய்கின்றனர். அவர்களை இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு சிறையில் வைத்து விட்டு பிணையில் விட்டு விடுவார்கள். பின்னர் நீதி மன்றங்களில் வழக்கு ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு இழுபடும்.

இவ்வாறான விடயங்களை செய்வதன் ஊடாக குறுகிய காலத்துக்கே மக்களை மகிழ்ச்சிப்படுத்த முடியும்.

அண்மைக் காலத்தைப் பார்க்கின்ற போது நிமல் லான்ஸாவைம் கைது செய்தார்கள். அவர் பிணையில் வெளியில் வந்திருக்கின்றார். ராஜித சேனாரத்ன தொடர்பாக மாதக்கணக்கில் கைது செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் இடம்பெற்றன. நான்கு நாள்களில் பிணையில் வந்தார்.

அதையும் விட குற்றங்களை செய்தவர்களுக்கு சரியான முறையில் நீதி மன்றங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்து நிரந்தரமாகவே உள்ளே தள்ளுவார்கள். அதாவது மஹிந்தானந்த அழுத்கமகேயுக்கு அவ்வாறு தான் நடந்தது. இவ்வாறு வழக்குகள் சரியாக தாக்கல் செய்யப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு எங்களுடைய பூரணமான ஒத்துழைப்பு இருக்கும்.

நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு ஊழல் மோசடிகள் பற்றிய பல்வேறு தகவல்களை வழங்கி இருக்கின்றேன். சில அடி முட்டாள்கள் – படிப்பறிவு இல்லாதவர்கள் – எதுவுமே தெரியாதவர்கள் – பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் பயன்பாடு தெரியாதவர்கள் – ரணில் விக்கிரமசிங்கசிடன் நான் பணம் வாங்கினர் எனக் கூறுகின்றார்கள். இது பன்முகப்படுத்தப்பட்ட நிதி. இது தொடர்பாக நான் நாடாளுமன்றத்தில் நேரடியாக விசாரணை செய்யக் கோரி இருந்தேன். அவர்களும் இதில் விசாரிப்பதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்லி விசாரிக்காமல் இருக்கின்றார்கள். சில அடிமுட்டாள்கள் இவ்வாறு பேசிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் உண்மையில் ஊழல், மோசடிகளை எதிர்த்து நாங்கள் அரசாங்கத்திற்கு தேவையான தகவல்களை கொடுத்து, அரசாங்கத்திற்கு இந்த ஊழல் ஒழிப்புக்கு உதவியாக இருக்கின்றோம்.– என்றார்.

# பிரதி அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு ஆலோசனை

## தயாசிறி ஜயசேகர தகவல்



பணியாளர்களுக்கான கொடுப்பனவு போன்ற சலுகைகளைப் பயன்படுத்தியமைக்காக பிரதி அமைச்சர்களுக்கு எதிராக, பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆலோசித்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவரை மேலும் தெரிவிக்கையில்,

"பிரதி அமைச்சர்கள் நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற மாட்டார்கள் என்று சபாநாயகர் இந்த வாரம் தெளிவாகக் கூறினார்.

எனவே, அவர்களை சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் கருத வேண்டும். இந்தச் சூழ்நிலையில் அவர்கள் சலுகைகளைக் கோர முடியாது.

அதன்படி, பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து நாங்கள் ஆலோசித்து வருகிறோம்.

ஏனைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் நாடாளுமன்றத்தில் பிரதி அமைச்சர்கள் வெளியிடும் அறிக்கைகளை நான் இனி ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

பிரதி அமைச்சர்கள் அளிக்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டாம் என்று அரச ஊழியர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்."என்றார்.



# மியன்மாரில் சைபர் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட இலங்கையர்கள்

மியன்மாரில் மேலும் 17 இலங்கையர்கள் சைபர் குற்றங்களில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலா வீசாவில் தொழிலுக்கு சென்றவர்களே இவ்வாறு சைபர் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மியன்மார் – தாய்லாந்து எல்லையில் அமைந்துள்ள இந்த பகுதிகள் கூகுள் வரைபடத்தில் சைபர் குற்றப் பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மியன்மாரின் மியாவெட்டி நகரிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள குறித்த பகுதிகள் முழுமையாக பயங்கரவாத குழுக்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

இதற்கு முன்னரும் இந்த பகுதியில் சைபர் குற்றங்களில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்ட இலங்கையர்கள் கடும் சிரமத்திற்கு மத்தியில் மீட்கப்பட்டனர்.

கணினித் துறையில் தொழிலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறித்த இளைஞர், யுவதிகள் இவ்வாறு சுற்றுலா வீசாவில் வெளிநாடு சென்றுள்ளமையும் தெரியவந்துள்ளது.

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணி மீண்டும் ஆரம்பம்



பொருளாதார நெருக்கடி காரணமாக, இடைநிறுத்தப்பட்டுள்ள கடவத்தைக்கும், மீரிகமவுக்கும் இடையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் குறித்த பணிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில், எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க சீனாவின் ஏற்றுமதி – இறக்குமதி வங்கியிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெறப்பட்டுள்ளதாக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் 2028 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இந்தப் பகுதியில் கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையிலான தூரம் 37 கிலோமீற்றர் ஆகும்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மாற்ற முடியாப் பண்பு

தென்னிலங்கைத் தலைவர்கள் தங்களது அரசியல் நலனுக்காகப் பேரினவாதத்தை எந்தச் சமயத்திலும், எந்த எல்லை வரையும் சென்றும் கிளப்புவதற்கு பின்னிற்க மாட்டார்கள்.

பேரினவாதப் பூச்சாண்டியை நிலை நிறுத்துவதற்காக எதையும் சொல்வார்கள் எதையும் செய்வார்கள். மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் கூட முடிச்சு போடத் தயங்க மாட்டார்கள்.

நடந்து முடிந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த பெருவெற்றியை அடுத்து தெற்கில் துவண்டு போன சிங்கள தலைவர்கள் மீண்டும் அதிகாரத்தைப் பெறுவதற்கான குறுக்கு வழியாகக் கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் பேரினவாதத்தைக் கிளப்புகிறார்கள். தாம் இழந்த அதிகாரத்தை இலகுவாகக் கைப்பற்றுவதற்காக சிங்கள - பௌத்த மேலாதிக்கத் திமிர்ப் போக்கை முறையற்ற விதத்தில் பயன்படுத்தித் தீவிரம் காட்டுகிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை ரத்து செய்யும் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அதனைப் பயன்படுத்தி இனவாதத்தைக் கிளப்ப இத்தகைய ஒரு தரப்பு பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தமையை அடுத்து, கொழும்பு விஜேயராம மாவத்தையில் தமக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு தங்காலையில் தன்னுடைய சொந்த இல்லமான கால்டன் மாளிகைக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புறப்பட்டு சென்ற விவகாரம் தென்னிலங்கையில் பெரும் அரசியல் பரபரப்பாக மாற்றப்பட்டிருக்கின்றது.

இப்படி முன்னாள் ஜனாதிபதிகள் தங்களுடைய உத்தியோகபூர்வ இல்ல வசதியை இழந்து, அவற்றை விட்டு புறப்பட்டமையைப் புலம்பெயர் தமிழர்களினதும் பிரிவினைவாதிகளினதும் நடவடிக்கைக்கு கிடைத்த வெற்றி என தெற்கில் சில தரப்புகள் முழங்குகின்றன.


முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை புலம்பெயர் தமிழர்கள் மற்றும் பிரிவினைவாதிகள் அவரின் கொழும்பு விஜேராம வீட்டை விட்டு விரட்டி தண்டனை வழங்கியுள்ளனர் என சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர எம்.பி. தெரிவித்திருக்கின்றார்.

'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மேலே' என்பது போல இலங்கை தீவில் நடக்கும் எல்லா விடயங்களுக்கும் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது குற்றம் சுமத்தி, அதன் மூலம் இனவாதத்தைக் கிளப்பி, பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கத் தீயைத் தூண்டி விட்டு, அதில் அரசியல் குளிர் காய்வது தென்னிலங்கைக் கட்சிகள்க்ன் பரவணிப் பழக்கம்.

அத்தகைய வியாக்கியானம் ஒன்றே இப்போது முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமையை ரத்து செய்யும் அரசின் நடவடிக்கையை ஒட்டியும் தெற்கில் கட்டவிழ்கின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை ரத்து செய்வது என்பது தற்போது அரசமைத்து இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் கால வாக்குறுதி. கடந்த பொதுத் தேர்தலை ஒட்டி தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலும். முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் ரத்து செய்யப்படும் என்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆளும் கட்சி தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை ரத்துச் செய்ய, அதற்கான காரணத்தை புலம்பெயர் தமிழர்கள் மீதும் தமிழ் இனத்தவர்கள் மீதும் முறையற்ற விதத்தில் சுமத்த முயல்கிறது தென்னிலங்கை. இது அத்தரப்பின் மாற்ற முடியாப் பரவணிப் பண்பியல்பே...!



வி.எஸ்.சிவகரன்

# முன்னாள் ஜனாதிபதிகளும் அநுரவின் எதிர்காலமும்!

கடந்த 1977ஆம் ஆண்டுக்கு தொடக்கம் இதுவரை ஒன்பது ஜனாதிபதிகளை நாடு சந்தித்தது. இவர்கள் யாவரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் என்பதால் ஜே.ஆர். கூறியது போல் ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர அனைத்து அதிகாரங்களையும் உபயோகிக்கும் அதியுச்ச பதவிக்கு வந்தவர்கள்.

உலகத்திலேயே மன்னராட்சி நடைபெறாத நாடுகளில், தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயக கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நாடுகளில், சர்வ வல்லமை பொருந்திய அதிகார உச்ச பதவி இலங்கை அரசுத் தலைவருடைய பதவிதான்.

கட்டுமட்டற்ற ஏக போக அதிகாரத்தைப் பயன்படுத்தியவர்கள் பதவியை இழந்த பின்னரும் கூட, அந்த இழப்பின் வலிகளை உணர முடியாத வகையில் சுகபோகங்களை தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். ஓய்வு பெற்ற ஜனாதிபதிகள் எவரும் கடந்த காலத்தில் ஜனநாயகத் தன்மையைப் பேணியவர்கள் அல்லர். அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு பல்வேறு விதமான ஏமாற்று – மோசடி – பிற்போக்கு அரசியலில் தாராளமாக ஈடுபட்டவர்கள்தான்.

அதிகார உச்சவரம்பை மீறி உத்தரவுகளைப் பிறப்பித்தவர்கள். எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதில் தீவிரம் காட்டியவர்கள். உள்நாட்டு யுத்தத்தில் தமிழர்கள் மீது பல்வேறு விதமான இன அழிப்புகளை மேற்கொண்டவர்கள். பொருளாதாரத் தடையை விதித்து, இன முரண்பாட்டைத் தோற்றுவித்து, அதில் தமது அரசியல் வாக்கு வங்கியைத் தமதாக்க பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டவர்கள். அதிகாரத்தில் இருந்த போது தமிழின அழிப்பின் முதன்மையாளர்களாக திகழ்ந்தவர்கள். அத்தகைய சந்திரிகாவும் மஹிந்த ராஜபக்ஷவும் இப்பொழுது இராஜமாதாவாகவும் தேசபக்தனும் போல் நல்லவன் வேடம் போடுகிறார்கள்.

சிங்கள மக்கள் மத்தியிலே மஹிந்த ராஜபக்ஷவுக்கு புலிகளை அழித்ததற்கான பெருவிருப்பு இருக்கலாம் நாட்டை ஒன்றிணைத்த நவீன இலங்கையின் சிற்பியாக அவர்கள் புகழாரம் சூடலாம். ஆனால் ஊழலும் மோசடியும் ஏமாற்றும் கொலையும் கொள்ளையும் அதிகாரத் துஷ்பிரயோகமும் இவர்கள் அனைவரின் காலங்களிலும் பட்டவர்த்தனமாகவே நிகழ்ந்தன.

அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் முழுக்க முழுக்க வினைத்திறனின்றி செயலாற்றி, பகிரங்கமாகவே ஊழலில் ஈடுபட்டனர்.

தமது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்காக மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகள் பெரும் சனநாயக போர் தொடுக்கவில்லை.

தமது செயல்களை மறைப்பதற்காக தமது ஏனைய சகாக்களும் ஊழல் செய்வதை இவர்கள் தடுக்கவும் இல்லை. தடுப்பதற்குரிய பொறிமுறையை உருவாக்கவும் இல்லை.

காலம் கடந்து என்றாலும் தற்போது சில பல விடயங்கள் நிகழத்தான் செய்கின்றன. முன்னாள் ஜனாதிபதிகளை கொழும்பில் உள்ள இல்லங்களில் இருந்து அப்புறப்படுத்தியமை சில வேளைகளில் தவறான கண்ணோட்டத்தில் உற்று நோக்கப்பட்டாலும் அவர்களுடைய சலுகைகளை அகற்ற வேண்டியது அவசியம்.

ஆனால் வீடுகளில் இருந்து வெளியேறும் படலத்தை அரசியல் மயமாக்கி, தமக்குச் சாதகமான வாக்கு வங்கியை உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட தொடங்கி உள்ளனர். 2009 இல் சிங்கள – பௌத்த தேசிய வாதத்தின் பெரும் கதாநாயகர்களாக, 'வீழ்த்த முடியாதவர்கள்' எனும் நிலையில் காணப்பட்ட ராஜபக்ஷ குடும்பத்தை அரசியலில் இருந்து விரட்டுவது என்பது மிக இலகுவான விடயம் அல்ல. தமது இருப்பைத் தக்க வைப்பதற்காக யுத்த வெற்றி வாதத்தையும் பௌத்த தேசிய வாதத்தையும்

தொடர்ச்சி ▼



# முன்னாள் ஜனாதிபதிகளும் அநுரவின் எதிர்காலமும்!

தொடர்ச்சி▲

பேசு பொருளாகி, இழந்த வாக்கு வங்கியிக் ஒரு பகுதியையேனும் தம்பசப்படுத்துவதற்கு அவர்கள் முனையலாம்.

அவ்வாறன நிகழ்தகவு, உதிரிகளாக உள்ள பலரை ஒன்றிணைக்கக் கூடிய பேராபத்தும் உண்டு. அரசாங்கம் ஊழலை ஒழிக்கின்றோம், செலவீனத்தைக் கட்டுப்படுத்துகின்றோம் எனும் நோக்கில் படித்த சிங்களவர்களின் வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்ள விரும்பி, இனவாதிகளின் மறு முகத்தை உணர்ந்து கொள்ளாமல் செயல்பட முனைவது என்பது அரசின் வெற்றிகரமான நகர்வில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தலாம்.

போக்கிலிகளும் அயோக்கியர்களும் தமக்குள்ளே அதிகாரத்தையும் பதவியையும் தக்க வைத்து 'எனக்கு நீ உனக்கு நான்' எனப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு எழுதப்படாத மரபுசார் விதியை அடிப்படையாகக் கொண்டு இந்த சமூக கட்டமைப்பு உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் பல்தேசிய நிறுவனங்கள் தங்களுடைய பொருளாதார நலனை மேம்படுத்திக் கொள்வதற்கும் அதனூடாக நாடுகளுக்குள் புகுந்து தமது இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் துடியாய் துடிக்கின்றன. அவ்விதமானவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி எமது அதிகாரிகளும் துணை போகக்கூடிய நிலைமை ஏற்படுவதானது ஏற்புடையது அல்ல.

அநுரா அரசங்கம் கடந்த ஓர் ஆண்டுக்குள் பல்வேறு விதமான சீர்திருத்த முயற்சிகளை மேற்கொண்டாலும் கூட , அதனை ஒழுங்கு முறைமைக்குள், கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலோடு முன்னெடுக்கக்கூடிய வகையில் வல்லாளுமை நுண்ணறிவோடு முன்னெடுக்கப்படல் அவசியம்.

வெறுமனே ஊடக கவர்ச்சிக்காகவும் இளையோர்களை குஷிப்படுத்துவதற்காகவும் முன்னெடுக்கப்படும் காரியம் பூமராங் போல் திருப்பித் தாக்கக்கூடிய வல்லமை உடையது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அனுதாப ரீதியாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வாக்கு பெறக்கூடிய களச் சூழலை ஏற்படுத்துவது முறையல்ல. இவ்விதமான அரசியல் சூட்சும தந்திரங்களை அரசு ஆலோசிக்காமல் மக்கள் மத்தியிலே பாரம்பரிய அரசியல்வாதிகளுக்கான வெளிப்படைத் தன்மையை வெளிக்காட்டுவதாகவே அதன் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

அண்மைய நாள்களிலேயே ஊழல் ஒழிப்புக்கான பல முயற்சிகளும் நடவடிக்கைகளும் கைதுகளும் அரங்கேறுகின்றன. அவற்றை ஒரு தேசக் கோட்பாடாக வரவேற்றாலும் கூட அரசாங்கத்துக்கு மிகவும் பெரிய பொறுப்பு இருக்கின்றது. இந்த முன்னாள் ஜனாதிபதிகள் சாதாரணமானவர்கள் அல்லர். அவர்கள் எல்லாவிதமான சாம, பேத, தான, தண்ட முறைகளையும் அனுபவித்து, செயல்படுத்தி வந்தவர்கள். அவர்களைக் கையாளுவதற்கு புதிய முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும். இல்லையேல் அரசுக்கு மிகப்பெரிய எதிர்ப்புணர்வை அவை ஏற்படுத்தும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே அரசுத் தரப்பு கணிசமாக வாக்கு வீழ்ச்சி அடைந்து. இது அடுத்து வருகின்ற தேர்தல்களிலும் எதிரொலிக்க கூடிய ஏது நிலைகள் காணப்படுகின்றன. எதிர்க்கட்சிகளின் ஐக்கியம் ஆளுங்கட்சியை திணறடிக்க கூடிய வகையில் ஏற்படலாம். தெற்கு இனவாதம் என்பதும் நீறு பூத்த நெருப்பாகவே காணப்படுகிறது.

வயிற்று பசியினால் ஏற்பட்ட பெரும் கூட்டத்தினால் வந்த மாற்றமே அநுரவுக்கு வாய்ப்பாகக்

தொடர்ச்சி▼



# முன்னாள் ஜனாதிபதிகளும் அநுரவின் எதிர்காலமும்!

தொடர்ச்சி ▲

கிட்டியது அம்மாற்றம் தொடரும் என்றோ, அது முடிந்த முடிவான வாக்கு வங்கி என்றோ கூறி விட முடியாது கொள்கை இல்லாத மிதப்பு வாக்குகள் எப்பொழுதும் ஏதோ ஒரு திசையில் சாயக்கூடியவை தான். அவ்வாறான வாக்குகளை நம்பி அரசியல் இருப்பை தொடர்ந்து தன தாக்கிக் கொள்ள முனைய எண்ணுவது என்பதும் அரசியல் முதிர்ச்சியற்ற நிலையாகத்தான் காணப்படுகிறது.

பல தசாப்தங்களாக அதிகாரத்தை சுவைத்த வர்களைக் கையாளுவது என்பது ரணிலின் மொழி யில் எல்போர்ட் கவர்மெண்டால் முடிந்த காரியம் ஆகுமா? ஏனெனில் வல்லாண்மை பேசும் உலக ஒழுங்கில் ஜனநாயக விரோதிகளும் இவர்களின் கூட்டுக் கூட்டாளிகளே. அதனால் எதிரிக்கு எதிரி நண்பன் என்கின்ற பெயரில் அதிகமான ஆபத்து உண்டு. அவ்விதமான ஆபத்து ஏற்படுமானால் பாதிக்கப்பட போவது அரசாங்கமே. அந்தப் புரிதல் அரசுக்கு இதுவரை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்றது எனும் மமதையுடன் அதிகார நிகழ்ச்சி நிரலில் ஈடுபடுவது என்பது ஒரு வகையில் பழிவாங்க லாக மாற்றமடையக் கூடிய நிலைமையும் உண்டு.

# இலங்கை அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி!

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஐந்தாவது போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் மோதின.

இதற்கமைய போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்தநிலையில் 140 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 14.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணியின் சார்பில் பெத்தும் நிசங்க 50 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.



# வாக்குறுதிகளை நிறைவேற்றாத தி.மு.கவுக்கா உங்கள் வாக்கு?

## திருச்சி பிரசாரத்தில் விஜய் கேள்வி







தி.மு.க. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதா? வாக்குறுதிகளை நிறைவேற்றாத தி.மு.கவுக்கா உங்கள் வாக்கு? என திருச்சியில் தொண்டர்கள் மத்தியில் த.வெ.க. தலைவர் விஜய் கேள்வி எழுப்பினார்.

பின்னர், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தனது பேச்சை சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது முதல் பிரச்சாரப் பயணத்தை திருச்சியில் தொடங்கியுள்ளார்.

சென்னையில் இருந்து இன்று காலை தனி விமானம் மூலம் திருச்சி வந்தடைந்த அவரை வரவேற்க, விமான நிலையம் முதல் காந்தி மார்க்கெட் மரக்கடை வரை லட்சக்கணக்கான தொண்டர்கள் திரண்டதால், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. விஜய் விமான நிலையத்திலிருந்து வெளியே வருவதற்கே சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேல் ஆனது.

காலை 10:35 மணியளவில் மரக்கடை பகுதியில் விஜய்க்குப் பேச நேரம் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அந்தப் பகுதிக்குச் செல்வதற்கே சுமார் ஐந்து மணி நேரத்துக்கும் மேலானது. தொண்டர்கள் நடந்து சென்று பிரச்சார வாகனத்தைப் பின்தொடர்ந்த நிலையில், அவரது வாகனம் மெதுவாக நகர்ந்து வந்து, பிரச்சார மேடையை அடைந்தது.

பின்னர் அவர் உரையாற்றுகையில், “அந்தக் காலத்தில் குலதெய்வ கோயிலில் சாமி கும்பிட்டுவிட்டுதான் போருக்கு செல்வார்கள். அதுபோலதான் அடுத்த வருடம் நடக்க உள்ள தேர்தலுக்கு திருச்சியில், இங்கே இப்போது பணியை தொடங்குகிறேன். எம்.ஜி.ஆர். முதல் மாநில மாநாடு நடத்திய இடம் திருச்சி, அறிஞர் அண்ணர் அரசியலில் களமாட விரும்பிய இடம் திருச்சி, பெரியாரும், அண்ணாவும், எம்.ஜி.ஆரும் நேசித்த இடம் திருச்சி. மதச்சார்பின்மைக்கு பெயர்பெற்றது திருச்சி மண்.

மலைக்கோட்டை பிள்ளையார், தந்தை பெரியாருடைய இடம் திருச்சி. திருச்சியில் தொடங்கிய அனைத்துமே திருப்பு முனையாக அமையும் என்று சொல்வார்கள். திருச்சிக்கென்று சிறப்பு வரலாறு உள்ளது.

டீசல் விலை 3 ரூபா குறைப்பு, மாணவர்கள் கல்விக் கடன் ரத்து, அரசு வேலையில் பெண்களுக்கு 40 வீத இட ஒதுக்கீடு, அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டம், அரசுப் பணியில் 2 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் போன்ற வாக்குறுதிகள் என்ன ஆனது? நாம் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதான். திமுகவினரிடம் இருந்து எந்த பதிலும் வரப்போவதில்லை.

தி.மு.கவை சேர்ந்தவருக்கு சொந்தமான மருத்துவமனையில் கிட்னி திருட்டு நடைபெற்றுள்ளது. பஸ்ஸில் பெண்களை இலவசமாக அனுமதித்துவிட்டு ஓசி, ஓசி என சொல்லிக் காட்டுகிறார்கள். எல்லோருக்கும் 1,000 ரூபா தருவதில்லை, கொடுத்த சிலருக்கும் சொல்லிக்காட்டுகிறார்கள், அசிங்கப்படுத்துகிறார்கள். உதவி செய்துவிட்டு சொல்லி காட்டுவதற்கு , உதவி செய்யாமலேயே இருந்திருக்கலாம்.

மின்சாரம், மருத்துவம், கல்வி போன்ற அடிப்படை தேவைகளை த.வெ.க. செய்துகொடுக்கும்.

அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதிய திட்டம் என்ன ஆனது? வரப்போகும் தேர்தலில் தி.மு.கவுக்கு வாக்கு போடுவீர்களா? அரசு உதவியை செய்துவிட்டு, மக்களை கொச்சைப்படுத்துகிறது. மகளிர் உதவித் தொகை அனைவருக்கும் கிடைக்கவில்லை.

வாக்குறுதிகளை நிறைவேற்றாத தி.மு.கவுக்கா உங்கள் வாக்கு? தி.மு.க கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதா? சொன்னீர்களே, செய்தீர்களா?” என்றார்.

விஜய் பிரசாரம் செய்ய ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே மைக் வேலை செய்யவில்லை. ஸ்பீக்கர்களும் சரியாக வேலை செய்யவில்லை. இதனால் அவர் பேச்சு தொலைக்காட்சி நேரலைகளில் சரிவர கேட்கவில்லை. மேலும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தனது பேச்சை சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

# ‘இசைஞானி இளையராஜா’ பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு





இசைத்துறையில், ஆர்வத்துடன் சிறந்த இசையைப் படைக்கின்ற இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கின்ற விதமாக தமிழ்நாடு அரசின் சார்பில், இனி ஆண்டுதோறும் ‘இசைஞானி இளையராஜா’ பெயரில் விருது வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கடந்த 1975 ஆம் ஆண்டு தொடங்கிய இசைஞானி இளையராஜாவின் இசைப் பயணம் இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இதனையொட்டி நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் திரையுலகில் பொன் விழா காணும் இசைஞானி இளையராஜாவுக்கு தமிழக அரசின் சார்பில் மிகப்பெரிய அளவில் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“இசைஞானி இளையராஜா, தனது திரையுலகப் பயணத்தை தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய இதயங்களை ஆளத்தொடங்கி, ‘அரை நூற்றாண்டு காலம்’ ஆகிறது.

திரைப்பயணத்தில் பொன்விழா கண்டிருக்கும் ‘சிம்பொனி சிகரம் தொட்ட தமிழர்’ இளையராஜா அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் சார்பில், உங்களில் ஒருவனாக இருந்து என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்ணைபுரத்தில் இருந்து புறப்பட்ட இந்த மனிதர், திறமையும், உழைப்பும் இருந்தால், எப்பேர்ப்பட்ட உயரங்களையும் அடையலாம் என்று, அனைத்து மனிதர்களுக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த அரை நூற்றாண்டு காலத்தில் ராஜாவின் பாடல்களை முணுமுணுக்காத உதடுகளே தமிழ்நாட்டில் இருக்க முடியாது.

ராஜாவின் பாடல்களை மனதில் ஏற்றி, தங்களின் இன்ப துன்பங்களைப் பொருத்திப் பார்த்துக் கொள்ளாத மனிதர்களே இருக்க முடியாது! இளையராஜாவின் இசை – தாயாகத் தாலாட்டுகிறது! காதலின் உணர்வுகளைப் போற்றுகிறது. வெற்றிப் பயணத்துக்கு ஊக்கமளிக்கிறது. வலிகளை ஆற்றுகிறது.

இசையால், நம் நெஞ்சங்களை ஆளும் இளையராஜாவுக்கு, எத்தனையோ புகழ் மகுடங்கள், பாராட்டு மாலைகள், பத்மபூஷண், பத்மவிபூஷண் போன்ற பட்டங்கள் இருந்தாலும், அவருக்கென அவருடைய ஆற்றலுக்கென பொருந்தி, அவருடன் என்றைக்கும் பயணிக்கின்ற பட்டம்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கிய ‘இசைஞானி’ பட்டம். அது பட்டமா இல்லை, பெயராகவே நிலைத்துவிட்டது.

இசைஞானியின் உயரங்களைப் பார்த்து பெருமைப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞருக்கு, இசைஞானி வழங்கிய மரியாதை, யாரும் யாருக்கும் தராத மரியாதை.

வரலாற்றில் எத்தனையோ மாமனிதர்கள் ஒரே பிறந்தநாளை கொண்டாடக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால், யாரும் இன்னொருவருக்காக தங்களுடைய பிறந்தநாளை மாற்றிக்கொண்டது கிடையாது. ஆனால், இசைஞானி, தலைவர் கலைஞருக்காக தன்னுடைய பிறந்தநாளை ஜுன் 2 ஆம் நாளாக மாற்றிக்கொண்டார்.

அந்த வகையில், உள்ளத்திலும் ராஜாவாக உயர்ந்து நிற்கிறார் இசைஞானி. தமிழாலும், இசையாலும், உயர்ந்தது கலைஞருக்கும் இசைஞானிக்கும் இருந்த நட்பு. தனிப்பட்ட முறையில் என்னால் மறக்க முடியாத நிகழ்வு என்றால், என்னுடைய மகள் செந்தாமரையின் நாட்டிய அரங்கேற்றத்தில் இளையராஜா பங்கேற்று வாழ்த்தினார். அந்த நட்போடு, அவர் லண்டனில் சிம்பொனி அரங்கேற்றம் செய்யப் போகிறார் என்று செய்தி வந்தவுடனே, அவருடைய வீட்டுக்கு முதல் நபராக சென்று என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துகளைத் தெரிவித்தேன்.

ராஜாவும் சிம்பொனி சாதனையை நிறைவேற்றிய வெற்றிக் களிப்புடன், என் வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்தார். இந்த அன்புக்கு நான் என்றைக்கும் கட்டுப்பட்டவன். கடமைப்பட்டவன்! அந்த அன்புடன் சொல்கிறேன். இது இசைஞானி இளையராஜாவுக்காக நடத்தக்கூடிய பாராட்டு விழா மட்டுமல்ல. உங்களுக்கு நாங்கள் எல்லோரும் நன்றி தெரிவிக்கக்கூடிய விழா.

இப்படிப்பட்ட இந்த சிறப்பான விழாவில், ஒரு அறிவிப்பு வெளியிடாமல் நான் இருக்க முடியுமா? இசைத்துறையில், ஆர்வத்துடன் சிறந்த இசையைப் படைக்கின்ற இசைக்கலைஞர்களை ஊக்குவிக்கின்ற விதமாக தமிழ்நாடு அரசின் சார்பில், இனி ஆண்டுதோறும் ‘இசைஞானி இளையராஜா’ பெயரில் விருது வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

அறிவிப்பு மட்டுமல்ல, ஒரு கோரிக்கையும் முன்வைக்கிறேன். நமது இளையராஜாவின் சாதனைகளுக்கு எந்த மகுடம் சூட்டினாலும், அது சாதாரணம் தான். அப்படிப்பட்ட மேதைக்கு இந்தியாவின் உயரிய விருதான “பாரத ரத்னா“ விருது வழங்கப்பட வேண்டும் என்ற ஆவலை இந்த மேடையில் நின்று உங்கள் அனைவரின் சார்பில், தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கும் இருக்கக்கூடிய ராஜாவின் ரசிகர்களின் சார்பில் இந்த விழாவில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது நிச்சயம் நிறைவேறும் என்று நான் நம்புகிறேன். இந்த அரங்கத்தில், இசைஞானியுடைய இசையைக் கேட்டு மயங்கியிருக்கும் எல்லோருடைய உணர்வுகளை, அவருடைய பாடல் வரிகளிலேயே சொல்லவேண்டும் என்றால், “இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே இன்பத்தில் ஆடுது என் மனமே”

இசைஞானி அவர்களே உங்கள் பயணம் இன்னும் பல்லாண்டுகாலம் தொடர வேண்டும். தொடர வேண்டும். என்று தமிழ் மக்களின் சார்பில் வாழ்த்துகிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

# மியன்மாரில் பாடசாலைகள் மீது இராணுவம் குண்டு வீச்சு தாக்குதல்

## 19 மாணவர்கள் பலி



மியான்மாரில் இரு பாடசாலைகள் மீது இராணுவம் குண்டு வீச்சு நடத்தியதில் 19 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கியாக்தவ் டவுன்ஷிப் பகுதியில் உள்ள இரு தனியார் பாடசாலைகள் மீதே இவ்வாறு குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

மியான்மாரில் அரசுக்கு எதிராக சின் மற்றும் ராக்கைன் ஆகிய மாநிலங்களில் அராகன் கிளர்ச்சிப் படை செயல்பட்டு வருகின்றது.

இந்த படை, தனிநாடு கோரி பல ஆண்டுகளாக அரச இராணுவத்துடன் போர் நடத்தி வருகின்றது.

இந்தநிலையில், அராகன் இராணுவத்தினருக்கும் மற்றும் மியான்மர் அரச இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பாடசாலைகள் மீது சுமார் 227 கிலோ வெடிமருந்துகளைக் கொண்ட வெடிகுண்டுகளை வீசி அந்நாட்டு இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில், 19 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்த நிலையில் பலியானவர்களுக்கு 15 முதல் 21 வயது இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக அராகன் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ள ஐ.நா சபையின் குழந்தைகள் நிறுவனமான யுனிசெப், இது ஒரு கொடூரத் தாக்குதல் என சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெஞ்சமின் நெதன்யாகுவை கைது செய்ய உத்தரவிடுவேன்

## சோஹ்ரான் மம்தானி தெரிவிப்பு



இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, நிவ்யோர்க் நகரத்திற்கு வருகை தந்தால், அவரை கைது செய்ய உத்தரவிட தாம் தயார் என நியூயோர்க் மாநில முதல்வர் தேர்தலில் போட்டியிட உள்ள சோஹ்ரான் மம்தானி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி நியூயோர்க் நகர முதல்வருக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த மேயர் தேர்தலில் மம்தானிக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவிற்கு சென்றிருந்தபோதும், அவர் மீது சர்வதேச பியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவருக்கு எதிரான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கைது செய்ய உத்தரவிடவுள்ளதாக மம்தானி தெரிவித்துள்ள கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# தேன் கூட்டில் கல்லெறியும் அநுர?



புருஜோத்தமன்
தங்கமயில்

நாடு எதிர்கொண்டிருக்கின்ற பிரதான
பிரச்சினைகளை ஓரமாக வைத்துவிட்டு, தேன்
கூட்டில் கல்லெறியும் வேலைகளை அநுர
அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றதோ
என்கிற சந்தேகம் ஏற்படுகின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்துக்
குப் பின்னராக, தேசிய மக்கள் சக்திதான்
தனித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை
பெற்று ஆட்சியமைத்திருக்கின்ற தனிக் கட்சியாகும்.
முள்ளிவாய்க்கால் முடிவுகளின் பின்னராக தென்
இலங்கை முழுவதும் போர் வெற்றி முழக்கத்தோடு
தேர்தலை எதிர்கொண்ட ராஜபக்ஷக்கள் கூட தனி
யொரு கட்சியாக நின்று மூன்றில் இரண்டு பெரும்பான்
மையைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் சுதந்திரக்
கட்சி தலைமையிலான பல கட்சிக் கூட்டணியாக
நின்றே அந்த வெற்றியைப் பெற்றார்கள். ஆனால்,
அறகலயவின் குழந்தையாக ஆட்சி பீடமேறியிருக்
கின்ற தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்திருக்கின்ற
பெரும்பான்மை என்பது யாரினாலும் சவாலுக்கு
உட்படுத்த முடியாதது. அநுர அலை தென் இலங்
கையில் மாத்திரமல்ல, வடக்கு – கிழக்கிலும் சில
கட்சிகளை ஆட்டங்காணச் செய்தது. பாரம்பரிய
அரசியல்வாதிகளைப் பெருமளவில் புறந்தள்ளி,
சாமானியர்களை அரசியல் அதிகாரத்தில் இருத்தி
யது. ஆனால், அப்படியாக வழங்கப்பட்ட மக்கள்
ஆணையை அநுரவும் தேசிய மக்கள் சக்தியும்
கோட்டை விடுகிறார்கள் என்கிற எண்ணம் மேலோங்
கிச் செல்கின்றது.

குறிப்பாக, இந்த நாடு சுதந்திரமடைவதற்கு
முன்னிருந்து எதிர்கொண்டிருப்பது அரசியல்
பிரச்சினையாகும். இன – மத சிறுபான்மையினர்
(எண்ணிக்கைச் சிறுபான்மையினர்) பேரினவாத
சக்திகளினாலும், அரசினாலும் அடக்கி ஒடுக்கப்
பட்டு வந்திருக்கிறார்கள். இன்றளவும் அந்த நிலை
மாறவில்லை. நாடு நீண்ட ஆயுத மோதல்களை
எதிர்கொண்டு பெரும் அழிவைச் சந்தித்திருக்
கின்றது. உயிரிழப்புக்கள், வலிந்து காணாமல்
ஆக்கப்பட்டமை, அங்கவீனம் என்கிற ஈடுசெய்ய
முடியாத இழப்புக்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.
அத்தோடு பொருளாதார, புலமைத்துவ இழப்பு
என்பது இலங்கையை சில தாசப்தங்கள் பின்னுக்கு
தள்ளி விட்டிருக்கின்றது. அப்படியான நிலையில்,
நாடு எதிர்கொண்டிருக்கின்ற அடிப்படைப் பிரச்சி
னையான இனமுரண்பாடுகள் – அதுசார் அரசியல்
பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதலே முதன்மையாக
இருக்க வேண்டும்.

இலங்கை வரலாற்றிலேயே, தேசிய மக்கள் சக்தி
தான் ஒட்டுமொத்த நாட்டு மக்களினதும் ஆணையைப்
பெற்று ஆட்சி அமைத்திருக்கின்றது என்று,
அநுரவும் அவரது அமைச்சர்களும் பெரு
மிதம் பேசுகிறார்கள். அந்தப் பெருமித பேச்சில்
குறிப்பிட்டளவு உண்மையும் இருக்கின்றது.
அப்படியான நிலையில், இனப்பிரச்சினைக
ளுக்கான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்
கையை முன்னெடுப்பதுதான், அர்ப்பணிப்புள்ள
அரசியல் தலைவரும் கட்சியும் செய்ய வேண்டியது.

அநுரவும், தேசிய மக்கள் சக்தியினரும் தங்க
ளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் புதிய அரசமைப்
பைக் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு
காண்போம் என்று திரும்பத் திரும்ப வலுயுறுத்தி
யிருக்கின்றார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்து



கிட்டத்தட்ட ஒருவருடமாகின்றது, அநுரவிடமோ
தேசிய மக்கள் சக்தியிடமோ புதிய அரசமைப்பைக்
கொண்டு வருவது தொடர்பிலான எந்தவொரு
எண்ணப்பாடையும் காண முடியவில்லை. மாறாக,
வழக்கமான கவனக் கலைப்பான் அரசியலையே
அவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தென் இலங்கை அரசியல் களம் எப்போ
துமே இனவாத – மதவாத சிந்தனைகளினால்
ஆட்கொள்ளப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின்
வெற்றியினால், அந்தச் சிந்தனைகள் அடித்து
ஒழிக்கப்பட்டுவிட்டன என்று யாராவது நம்பினால்,
அவர்கள் இந்த நாட்டின் அரசியலை, இயங்கு
நிலையை புரிந்து கொள்ளாதவர்கள். ஏனெனில்,
இன்று ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தியினரே,

தொடர்ச்சி▼



# தேன் கூட்டில் கல்லெறியும் அநுர?

தொடர்ச்சி▲

மக்கள் விடுதலை முன்னணியாக (ஜே.வி.பி) நின்று விதைத்த இனவாத சிந்தனைகள் எந்தவொரு பாரம்பரிய கட்சிக்கும் சளைத்தது அல்ல. அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இந்த நாட்டில் விதைத்த இனவாத சிந்தனைகளைப் போன்றுதான் ஜே.வி.பி.யின் தேர்தல் அரசியலுக்கான வருகையும் இனவாத விதைப்பின் மூலமே நிகழ்ந்தது. ராஜபக்ஷக்களை ஆட்சியில் ஏற்றுவதற்காக ஜே.வி.பி. நிகழ்த்திய இனவாதப் பிரச்சாரம் என்பது அச்சமூட்டக் கூடியது. குறிப்பாக, தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை பயங்கரவாதமாகச் சித்திரித்த வரலாறு அந்தக் கட்சிக்கு உண்டு. இன்றைக்கு தேசிய மக்கள் சக்தி முகத்தோடு, அறகலயவின் குழந்தையாக ஜே.வி.பி. ஆட்சி பீடம் ஏறிவிட்டது. கொரோனா தொற்றுக் காலமும், அறகலயவும் இல்லையென்றால், தேசிய மக்கள் சக்தியினால் ஆட்சி பற்றிய கனவைக் கண்டிருக்கவே முடியாது. கொரோனா தொற்றுக் காலம், நாட்டின் உண்மையான பொருளாதாரப் பின்னணியை வெளிப்படுத்த போதுமாக இருந்தது. நாட்டு மக்களின் பசி என்கிற வயிற்றுப் பிரச்சினைதான், அறகலயவுக்கு வலுச் சேர்த்தது. அதுதான் ராஜபக்ஷக்களை அகற்ற உதவியது. அதற்கு உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் உதவின என்பதை மறைப்பதற்கு



இல்லை. ஆனால், அறகலய திரட்சி, பொருளாதார நெருக்கடிகளினால் எழுந்தது. அப்படியான நிலையில், தென் இலங்கையில் இருந்து இனவாத – மதவாத அரசியல் தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்று நம்ப வேண்டியதில்லை.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, பொதுத் தேர்தலோடு ஒப்பிடும்போது கணிசமான வாக்கு இழப்பைச் சந்தித்தது. இது, அநுரவையும் அரசாங்கத்தையும் சலனப்படுத்திவிட்டது. அதனால்தான், தென் இலங்கையில் கவனக் கலைப்பான் வேலைகளைப் பார்த்து வருகின்றது. ரணில் மீதான ஊழல் வழக்கும், அது தொடர்பிலான கைதும் அதில் பிரதானமானது. அதனையடுத்து, முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துக்களை



இரத்து செய்யும் சட்டமூலத்தை நிறைவேற்றியிருக்கின்றது. அதன்மூலம், சந்திரிக்கா, மஹிந்த, மைத்திரி உள்ளிட்டவர்கள் வசித்து வந்த அரச பங்களாக்களில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். (சந்திரிக்கா வெளியேறுவதற்கு இன்னும் கால அவகாசம் கோரியிருக்கின்றார்.) முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் இணையர் (கணவரோ, மனைவியோ) பெறும் சலுகைகளை நீக்குவோம் என்பது தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றுதான். அதனை நிறைவேற்றினால், ஏன் விமர்சனம் எழுகின்றது என்ற கேள்வி எழலாம். பிரதான பணியை மறந்து, சிறிய விடயங்களை முதன்மைப்படுத்தி களத்தினை கலக்கி விடும் வேலையாகத்தான் இதைப் பார்க்க வேண்டியிருக்கின்றது. ஏனெனில், ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சி என்பது போர் வெற்றி முழக்கம் மற்றும் இனவாத சிந்தனைகளினால் நிகழ்ந்தது.

கொழும்பு ஏழு, விஜயராம வீதியிலுள்ள அரச வளவில் இதுவரை காலமும் வசித்து வந்த மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை அங்கிருந்து வெளியேறினார். அவர், தங்காலையிலுள்ள தன்னுடைய வீட்டிற்குச் சென்றார். 2015 ஜனாதிபதித் தேர்தலில்

தொடர்ச்சி▼



# தேன் கூட்டில் கல்லெறியும் அநுர?

தொடர்ச்சி▲

தோல்வியுற்றதும், அலரி மாளிகையிலிருந்து வெளியேறி நேராக தங்காலையிலுள்ள வீட்டிற்கே சென்றார். அப்போது அங்கு கூடியிருந்த மக்கள் முன்னிலையில், தன்னை வடக்கு - கிழக்கு மக்கள் தோற்கடித்துவிட்டனர் என இனவாதம் பேசினார். இப்போதும் அப்படியான செய்தியையே ராஜக்ஷக்கள் தென் இலங்கையை நோக்கி முன்வைக்கிறார்கள். "..புலம்பெயர் தமிழர்களின் வேண்டுகோளை ஏற்று அநுர, ராஜபக்ஷக்களை அலைக்கழிக்கிறார். புலிகளின் தலைவர் இப்போது இருந்திருந்தால், அநுரவின் செயலுக்காக மகிழ்ந்திருப்பார்..." என்று மஹிந்தவின் ஊடக இணைப்பாளர் தெரிவித்திருக்கின்றார். ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சி, இந்த சிந்தனை விதைப்பில் இருந்தே மீண்டும் கட்டியெழுப்படும். அது, அநுர அரசாங்கத்தை புலம்பெயர் தமிழர்களின் அடிமை என்று சித்திரிப்பதில் தொடங்கி, தமிழர்களுக்கு எதிரான இனவாதம் பிரசாரம் மீண்டும் பெருமளவில் முன்னெடுக்கப்படும். அதனை கொழுந்து விட்டெரிய வைப்பது ஒன்றும் பாரம்பரிய அரசியல்வாதிகளுக்கு பெரிய வேலையில்லை. இப்போதே அவ்வாறான நிலையொன்றை உருவாக்கிவிட்டால், அதனைக் காட்டி புதிய அரசமைப்பு என்கிற விடயத்தைத் தட்டிக்கழிக்கலாம் என்று அநுரவும், தேசிய மக்கள் சக்தியும் நினைத்தால், அது அவர்களை கடந்த காலங்களைப் போன்று மீண்டும் ஐந்து வீத வாக்குகளுக்குள் சிக்க வைத்துவிடும்.



புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை சீர்செய்தல் என்கிற விடயங்களில் தேசிய மக்கள் சக்தி முதன்மைக் கவனத்தைச் செலுத்த வேண்டும். வராது வந்த மாமணியாக, கிடைத்திருக்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு அதனை நிறைவேற்ற வேண்டும். இல்லையென்றால், இந்த நாட்டில் புதிய அரசமைப்பு ஒன்று நிறைவேற்றப்படுவதற்கான களத்தினை காலம் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு. சட்டமூலங்களின் வழியாக விடயங்களைக் கையாளுவதைக் காட்டிலும், புதிய அரசமைப்பின் ஊடாக விடயங்களைக் கையாள வேண்டும். அதாவது, முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை இரத்து செய்தல் என்பது நல்ல விடயம். ஆனால், அதனைவிட புதிய அரசமைப்பு நிறைவேற்றம் முதன்மையானது. ஏனெனில், அதன்போது, முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் இரத்துச் செய்தல் தொடர்பிலான சரத்தினை உள்ளடக்கிக் கடந்துவிடலாம். அதனால், தேவையற்ற சலசலப்புக்கள் எழாமல் செய்திருக்கலாம். இன்றைக்கு தென் இலங்கை ஊடகங்கள் முழுவதும் ராஜபக்ஷக்களையும் ரணிலையும் சுற்றித்தான் சுழல்கின்றன. சீனத்து தூதுவர் ரணிலையும் மஹிந்தவையும் ஓடியோடி சென்று சந்திக்கிறார். இதனை அரசியல் - இராஜதந்திர ரீதியில் முக்கிய விடயமாக கட்டமைக்கிறார்கள். இவை பாரம்பரிய கட்சிகளை நோக்கிய மக்களை மீண்டும் கொண்டு சேர்ப்பதற்கான காட்சிகளாகும்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் அநுரவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எந்தவித அக்கறையும் இல்லை என்றால், இன்று அவர்கள் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் திசை அவர்களையும் நாட்டையும் மீண்டும் முட்டுச் சந்தில் நிறுத்தும். அவர்கள் கவனக் கலைப்பான்களின் வழியாக அரசியலைக் கையாளலாம் என்று நினைத்தால் அவர்களின் தோல்வி தூரத்தில் இல்லை. ஆட்சி பீடமேறிய ஒரு வருடத்துக்குள்ளேயே மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலமுள்ள அரசாங்கத்தை ஆட்டங்காண வைக்கும் அளவுக்கான அதிர்வுகளை தென் இலங்கையின் ஆதிக்க சக்திகள் காட்டத் தொடங்கிவிட்டன. அப்படியான சூழலில், மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாக முதன்மைப் பிரச்சினைகளைக் கையாள்வதுதான் தேசிய மக்கள் சக்தியையும் நாட்டையும் காப்பாற்ற உதவும்.

# வீதியில் பயணித்த வயோதிபர் லொறி மோதி பரிதாப மரணம்



லொறி மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை களுத்துறை, புலத்சிங்கள, பாருதல்வில பகுதியில் இடம்பெற்றுள்ளது.

லொறி ஒன்று வீதியில் பயணித்த நபர் ஒருவர் மீது மோதிய தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று புலத்சிங்கள பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்த நபர் புலத்சிங்கள வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

களுத்துறை, புலத்சிங்கள பகுதியைச் சேர்ந்த 69 வயது டைய வயோதிபரே உயிரிழந்தவர் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புலத் சிங்கள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.











# மட்டு.வாவியை ஊடறுத்து காட்டு யானைகள் புதுக்குடியிருப்புக்குள் புகுந்து அட்டகாசம்!

(சக்தி)

மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து எழுவான்கரைப் பகுதியிலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குள் நேற்றுமுன்தினம் இரவு வேளையில் உள்நுழைந்த காட்டு யானைகள் வேலிகளை உடைத்து சேதப்படுத்தியும், பயன் தரும் வாழை, கரும்பு, மற்றும், விவசாய தோட்டங்களை துவம்சம் செய்தும் உள்ளன என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப் பகுதியிலேயே இவ்வாறு தொடர்ச்சியாகக் காட்டுயானைகளின் அட்டகாசங்கள் இருந்து வருகின்ற நிலையில் அக்காட்டு யானைகள் தற்போது மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து எழுவான்கரைப் பகுதிக்குள்ளும் நுழைந்துள்ளமையால் அங்குள்ள மக்கச் தாங்களும் அச்சத்தின் மத்தியில் தமது வாழ்வைக் கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்க் கவலை தெரிவிக்கின்றனர்.

நகரை அண்மித்துள்ள பகுதிகளுக்குள் இவ்வாறு காட்டு யானைகக் வருவதைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரங்களும், முற்றாகப் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்கத்துக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதோடு, மக்களின் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன.


வெள்ளிக்கிழமை இரவு திசைமாறி மண்டூர் பகுதியிலிருந்து வெல்லாவெளி ஊடாக புதுக்குடியிருப்பு பகுதிக்குள் இவ்வாறு நான்கு காட்டு யானைகள் ஊடுருவியிருக்கலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர். அப்பகுதிக்கு விரைந்த வன ஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும், இளைஞர்களும் இணைந்து காட்டுயானைகளை மீண்டும் மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து படுவான்கரைப் பகுதிக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.








# 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூல் வெளியீடு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்




பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய "தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்" நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

எழுத்தாளர் வசந்தி தயாபரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை எழுத்தாளர் வி.ரி .இளங்கோவனும், கருத்துரைகளை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எம். நஹியா, கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை பேராசிரியர் எஸ்.ஜெய்சங்கர், சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் தெ.மது சூதனன், யதீந்திரா ஆகியோரும் நிகழ்ந்துவர்.

இந்த நூல் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் வெளியீடாகும்.

# கல்முனையில் தமிழ் - முஸ்லிம் செயலகங்களை இணைத்து ஒரு கூட்டம் என்பதை ஏற்க முடியாது

## தமிழரசு வாலிப முன்னணிச் செயலர் சட்டத்தரணி நிதான்சன் தெரிவிப்பு




(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனையில் இருக்கின்ற கல்முனை வடக்கு மற்றும் கல்முனை தெற்கு பிரதேச செயலகங்கள் இரண்டையும் இணைத்து ஓர் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை நடத்துவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேயவிக்கிரம அறிவித்தல் கொடுத்துள்ளார். இதனை எமது கட்சி முற்றாக எதிர்க்கிறது. அதனை ஒருபோது நாங்கள் ஏற்கோம் .

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் செயலாளரும், கல்முனைத் தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி அருள்.நிதான்சன் தெரிவித்தார் .

கல்முனை ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் பேசுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கே அவர் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாறையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இக் கூட்டத்தௌ எதிர் வரும் செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதி நடத்த ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு இன்று மாவட்ட அரசாங்க அதிபரால் சம்பந்தப்பட்ட சகலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் நாங்கள் முற்றாக எதிர்க்கிறோம்.

2015 ஆம் ஆண்டு தமிழ் - முஸ்லிம் மக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தில்கூட மேற்படி தமிழ் - முஸ்லிம் பிரதேச செயலகங்களுக்கான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டம் தனித்தனியாக நடைபெற்றன.

ஹாரிஸ் மற்றும் கோடீஸ்வரன் ஆகியோர் தலைவர்களாக இருந்தனர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நியமனங்களை வழங்கியிருந்தார். இதுவரை காலமும் தனித்தனியாக இக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதேவேளை கல்முனை மக்கள் கடந்த பல தசாப்த காலமாக, வடக்கு பிரதேச செயலகம் கோரி பல விதமான போராட்டங்களை நடத்தி வருகின்ற இவ்வேளையில் இத் தீர்மானத்தை நாம் வன்மையாக எதிர்க்கிறோம்.

இன்று இலங்கையினுடைய மேன்முறையீட்டு நீதிமன்றத்திலே கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக வழக்கும் சென்று கொண்டிருக்கிறது.

ஆனால் இன்று அவற்றை இணைத்து ஒரு பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தை நடத்துவதற்கு எண்ணுவது என்பது ஒரு தவறான செயல். இது எங்களுக்குப் பெரும் கவலையை அளிக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எமது செயலக அதிகாரத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறதா? எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை மீறிச் செயல்படுகிறதா? கல்முனையில் அரச சார்பு தமிழர்களுக்கு இது அவமானம். எதுவானாலும் தனித்தனியாகவே இந்தக் கூட்டம் நடைபெற வேண்டும். - என்றார்.

# சந்தேகத்துக்கிடமான முறையில் வீட்டில் உயிரிழந்த குடும்பப் பெண்

வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தளை, தம்புள்ளை, தித்தவெல்கொல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்தே மேற்படி பெண் நேற்று சனிக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளை, தித்தவெல்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயாரே உயிரிழந்துள்ளார்.

இவர் திருமண நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் உறங்கியுள்ள நிலையில் நேற்று அதிகாலையில் நீண்ட நேரமாகியும் எழும்பாமல் இருந்துள்ளார்.

இதனையடுத்து பெண்ணின் கணவர் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ள நிலையில் வைத்திய பரிசோதனையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரியவந்துள்ளது.



இது தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பஸ்களை அலங்கரிக்க அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் இரத்து

பயணிகள் போக்குவரத்து பஸ்கள் மற்றும் வினோத சுற்றுலாப் பயணங்களுக்காக பஸ்களை அலங்கரிக்கவும் நவீனமயப்படுத்தவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றுநிரூபத்தை இரத்துச் செய்து புதிய சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் இந்த சுற்றுநிரூபம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் -14.09.2025




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால்அதனைவேறுநாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல் திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -14.09.2025




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும்.சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# சட்டவிரோதமான 25 வாகனங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

சட்டவிரோதமாக உரித்தாக்கப்பட்ட 25 வாகனங்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், விசாரணைகளின் போது பெறப்பட்ட சரிபார்க்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமாகப் பதிவு செய்தல் மற்றும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வாகனங்களை ஒன்று சேர்த்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுபோன்ற வாகனங்களை வைத்திருப்பவர்களில் பெரும்பாலான நபர்கள் அரசியலுடன் தொடர்புடையவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.